முருகப்பெருமான் துணை

## ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

08.08.2024

1. என்குலம் என் மக்களென
எங்கும் கலியுகம் கண்டுவிட
சண்முகனார் அரங்கன் என்னை
சரவண ஜோதி வெளிப்பாடு ஆக்கி

2. ஆக்கியே பிரணவக் குடிலில்
அற்புதத்தை நிகழ்த்தி வர
மகிழ்ந்துமே அரங்க மகானும்
மண்ணுலகம் இந்த உண்மை அறிய

3. அறியவே குருவார ஆசியாக
ஆடி திங்கள் சதுர்வாரம் தனில்
தெரிவிப்பேன் குரு வார அருளாசி
தெய்வ மகா சக்திகள் வாழும்

4. வாழும் பிரணவக் குடிலை
வணங்கி மக்களெல்லாம் வர
நாளும் நாளும் வாழ்வினில்
நன்மைகளாகப் பெருகி இனிதே

5. இனிதே தன்வினை வெல்வதுடன்
இந்தக் கலியின் கொடுமைதனை
துணிவுபட வெல்லும் பலம்
தேசிகன் என் அனுகூலம் வழி

6. வழிதனில் அடைந்து உயர்வர்
வழிபாட்டில் தருமநெறியுடன்
அழியாமைதனை அடைகின்ற
அனைத்து மகா சூட்சுமங்களும்

7. சூட்சுமங்களும் என் உபதேச
சுத்தநெறிக் கொள்கை வழி
தட்டாமல் ஏற்று வருகவே
தானவர்கள் தேக மனபலமுடன்

8. பலமிக்க ஞானிகளின் வழி
பழுதின்றி தேர்வு செய்யும்
சலனம் வென்ற ஞானிகளாக
சகலரும் சக்திநிலை அடைவர்

9. அடையவே அரங்கன் என்
ஆற்றல் மிக்க சன்மார்க்கமே
தடை சோடை தகர்க்கின்ற
தனிப்பெருங் கருணை வடிவாக இருக்க

10. இருக்கவே கலிவாழ் மக்கள்
ஏற்றுவர ஞானவான்களாக
கருத்துடன் கடைத்தேற்றம் பெறுவர்
கண்டுரைத்த அரங்கன் என் அருளாசி முற்றே.

–சுபம்–